**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.142/2025** |
| Prosecution witness | : | P.W.4 |
| List of witness | : | L.W.3 |
| Name | : | ராஜேஷ் |
| Father's /Husband Name | : | டேனியல் |
| Village | : | செம்பியன் கூந்தலூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 40 |
| Occupation | : | மின்சார வாரியம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 20th day of January 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் செம்பியகூந்தலூரில் குடியிருந்து கும்பகோணம் மின்சார வாரியத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பன்னீர்செல்வம் என் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வருகிறார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரும் என் வீட்டிற்கு பக்கத்தில் தான் வசித்து வருகிறார். அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வருகிறது. அது சம்மந்தமாக கடந்த 16.06.2025 ம் தேதி மாலை 05.00 மணிக்கு நானும் எனது அண்ணன் ஜாக்கோப் ராஜா இருவரும் என் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அ.சா.1 பன்னீர் செல்வம் அந்த வழியாக அவர் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது பன்னீர் செல்வம் வீட்டிற்கு செல்லும் வழியில் எதிரி ரூபிலா காட்டு கருவ முள்ளை வெட்டி போட்டு வைத்திருந்தார். அதனால் அ.சா.1 பன்னீர்செல்வம் நான் வீட்டிற்கு செல்லும் வழியே யார் முள்ளை வெட்டி போட்டது என்று கேட்டுக்கொண்டிருந்த போது எதிரி ரூபிலா நான் தான் முள்ளை வெட்டி போட்டேன் என்று கூறினார். அப்போது எதிரி ரூபிலா பன்னீர்செல்வத்தை எங்கள் வீட்டு வழியாக நீங்கள் செல்லக்கூடாது என்று கூறியும் அதனால் தான் நான் முள்ளை வெட்டி போட்டேன்

என்று கூறினார். ஆனால் அந்த பாதையானது பொது பாதை ஆகும். உடனே பன்னீர் செல்வம் முள்ளை எடுத்து போடுவதற்காக கீழே குனிந்து எடுக்கும் போது எதிரி ரூபிலா அ.சா.1 ஐ குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டு அவர் கையில் வைத்திருந்த அரிவாளால் அ.சா.1ன் இடது பக்க தலையில் வெட்டினார். உடனே அ.சா.1 வெட்டுப்பட்டவுடன் கீழே விழுந்துவிட்டார். பின்பு நானும் எனது அண்ணன் ஜாக்கோப் ராஜ் மற்றும் அவரது மனைவி கலா ஆகியோரும் அவரது தலைக்கு முதலுதவி செய்து பின்பு ரிக்கி பாண்டி என்பவரது ஆட்டோ மூலமாக நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். மேற்படி மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு அவரை அழைத்துக்கொண்டு மேற்படி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். மேற்படி சம்பவத்தின் போது எதிரி ரூபிலா அ.சா.1 பன்னீர் செல்வத்தை தகாத வார்த்தை கூறி திட்டியது எங்களுக்கு மிகவும் கூச்சமாக இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் ரூபிலா வீட்டிற்கு வலது பக்கத்தில் குடியிருந்து வருகிறேன். எங்கள் இடம் அவர்கள் இடத்தில் இருக்கிறது என்று சொல்லி புகார் கொடுக்கப்பட்டு பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி சம்பவமானது பன்னீர்செல்வம் வீட்டின் கொல்லை பகுதியில் தான் நடந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் மற்றும் அ.சா.1ன் வீட்டிற்கும் பின்னால் ஆறுஉள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று ஆற்றினை தூர் வாரும் பணி நடந்துக்கொண்டிருந்தது என்றால் சரிதான். அப்போது தூர் வாரும் பணியாளர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். அ.சா.1ற்கு அடிப்பட்டு இரத்தம் கீழே படிந்திருந்ததா என்றால் நான் அதை பார்க்கவில்லை தலையில் மட்டும் பார்த்தேன். போலீசார் விசாரணையில் அரிவாளின் தோற்றம் பற்றியோ , நீளத்தை பற்றியோ, உயரத்தை பற்றியோ என்னிடம் கேட்டார்கள் என்றால் நான் வெட்டு

அரிவாளில் வெட்டியதாக சொன்னேன். நான் வழக்கிற்காக எதிரி வெட்டு அரிவாள் வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது எதிரிக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அன்றைய தினம் எதிரி அ.சா.1 ஐ தாக்கவும் இல்லை காயப்படுத்தவும் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரியின் மீதுள்ள முன்விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று என்ன கிழமை தெரியமா என்றால் தற்போது நினைவில்லை. நான் அ.சா.1 கொடுத்த தவறான புகாரை அனுசரித்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.20 15:21:01 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.